Regd.with RNI No.:TNTAM/2014/60345, Postal Regd.No.:TRY/092/2019-2021 (with prepayment)
Posted at Trichy RMS on 27th, 28th, 29th of every month; Date of publication 25th or 26th of every month

## தஞ்சாவூரில்
# பங்காளர்களுக்கான ஜெபம்

**2021 டிசம்பர் 5**
ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை

இடம்: சுந்தர் மஹால் (T.I. ஹால்),
காவேரி நகர்,
புதுக்கோட்டை ரோடு,
தஞ்சாவூர் - 5

தேவ செய்தி
**Dr.ஆனந்த ஸ்திரா**

தொடர்புக்கு:
0431 2765386 செல் - 94888 45627

# குடும்பங்களுக்கான ஆலோசனை ஜெபம் மற்றும் பங்காளர் சந்திப்பு

## நாகர்கோவிலில்

**டிசம்பர் 11**
சனிக்கிழமை

நேரம்: காலை 9 முதல் மதியம் 1 மணி வரை
மாலை 4 முதல் இரவு 7 மணி வரை

இடம்:
அபிஷேக் காம்பளக்ஸ்,
மெத்தை கடை மாடி,
W.C.C. ரோடு,
நாகர்கோவில்

தொடர்புக்கு:
0431 2765386
செல் - 82203 17472,
94888 45627

## தூத்துக்குடியில்

**டிசம்பர் 12**
ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

இடம்:
அராஜ் மஹால்,
பழைய பேருந்து நிலையம்
மற்றும்
ஹோட்டல் ராஜ் அருகில்,
தூத்துக்குடி

தொடர்புக்கு:
0431 2765386
செல் - 94889 08329
94888 45627



பிரார்த்தனை
**Dr.ஆனந்த ஸ்திரா**

Published by Dr.Jane Joshua on behalf of ANBARIN OOZHIYAM published from
No.40, Seventhi Pillaiyar Koil Street, Woraiyur, Trichy - 620 003 and printed by Mr. D. Asu Selvaraj
at Angel Printers, 1/459-c, N.G.O. Colony, Satchiyapuram, Sivakasi West - 626 124, South India.
Editor : Dr.Jane Joshua, M.B.A., Ph.D.,

# அன்பரின் ஊழியம்
## ANBARIN OOZHIYAM

மலர் : 7 | இதழ் : 12 | டிசம்பர் 2021 | தனிபிரதி – ரூ. 20/– | ஆண்டு சந்தா ரூ 200/–
VOL:7 | Issue No:12 | December 2021 | Single Copy - Rs 20/- | ANNUAL SUBSCRIPTION : RS 200/-



**... இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார் ...**
- சகரியா 9:9



# Dr. ஆனந்த ஸ்திரா அவர்கள் பிரார்த்தனையினால் கர்த்தர் இயேசு செய்த மகத்துவமான அற்புதம்

## படுத்த படுக்கையாகிப் போன சகோதரிக்கு பரிபூரண சுகத்தை அருளின அற்புதர்! வறுமை நிலை மாறி ஆசீர்வதிக்கப்பட்ட பங்காளரின் அற்புத சாட்சி



எனது சகோதரிக்கு திருமணமான சில வருடங்களில் மூட்டுக்கு மூட்டு வலி, வீக்கம் ஏற்பட்டு **(Rheumatoid Arthritis)** நாளடைவில் படுத்த படுக்கையாகி விட்டார்கள். இந்நோய் வந்தவர்கள் எலும்புகள் அனைத்தும் பவுடர் போலாகி மரித்து விடுவார்கள் என்று பலர் கூறினார்கள். இதனால் அவளது கணவரும் எங்கள் வீட்டிற்கே எனது சகோதரியை அனுப்பிவிட்டார்கள். நாங்கள் பல்வேறு சிறப்பு மருத்துவமனைகளுக்கு அழைத்து சென்று சிகிச்சை அளித்தோம். என்றாலும் அவர்கள் சரீரத்தில் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருந்தார்கள். இதனால் நாங்கள் மிகவும் கவலையடைந்தோம். இந்நிலையில் எனது பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் அன்பரின் ஊழியத்தை குறித்தும் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்களை குறித்தும் கூறி, சகோதரர் அவர்களிடம் சகோதரியை அழைத்து சென்று ஜெபித்தால் நிச்சயம் சுகம் கிடைக்கும் என்றார்கள். சுகம் கிடைத்தால் போதும், எங்கு வேண்டும் என்றாலும் அழைத்து செல்லும் மனநிலையில் நாங்கள் இருந்தோம். உடனடியாக அன்பரின் ஊழியத்தை தொடர்புகொண்டோம். மதுரையில் குடும்ப ஆசீர்வாதக் கூட்டம் நடப்பதாக தெரிவித்தார்கள். அக்கூட்டத்திற்கு சகோதரியை தூக்கிக்கொண்டு சென்றோம். கூட்டத்தின் ஒரு மூலையில் கிடத்தி இருந்தோம். செய்தி வேளை, ஜெப வேளை முடிந்து தனி ஜெப வேளையில் சகோதரர் எனது சகோதரியின் அருகில் வந்து எங்களிடம் விசாரித்துவிட்டு மிகுந்த கண்ணீரோடு ஜெபம் ஏறெடுத்தார்கள். நாட்கள் கடந்தன, மருத்துவ கூற்றுக்கு மாறாக சகோதரியின் சரீரத்தில் முன்னேற்றம் காணப்பட்டது. மெதுவாக நிற்க ஆரம்பித்தார்கள். இது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது. அதன்பிறகு நடக்க ஆரம்பித்தார்கள். தன்னுடைய வேலைகளை தானே செய்துகொண்டார்கள். சில நாட்களுக்கு பின் பூரண சுகம் பெற்றார்கள். இன்று கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்கு மேலாக எந்தவித பிரச்சனையும் இல்லாமல் நல்ல சுகத்துடன் இருக்கின்றார்கள்.

இதைத் தொடர்ந்து அவர்கள் கூட்டங்களில் கலந்துகொண்டேன். சகோதரிக்கு இயேசு செய்த அற்புதத்தினால் அவரை விசுவாசிக்க ஆரம்பித்தேன். அப்பொழுது எனக்கு எந்த வேலையும் இல்லை, வருமானமும் இல்லை. எனது குடும்பம் மிகுந்த வறுமையில் இருந்தது. வாடகை வீட்டில் தான் குடியிருந்தோம். ஒருவேளை சாப்பாட்டிற்கு கூட கஷ்டமான நிலை. கல்லூரி படிப்பிற்குரிய கட்டணம் செலுத்த முடியாமல் படிக்க முடியாத நிலையில் இருந்தேன். சகோதரர் அவர்களை சந்தித்து ஜெபித்துக்கொண்டேன். எனது நிலையை அறிந்த சகோதரர் எனது கல்லூரி கட்டணம் கட்டுவதற்கு உதவி செய்தார்கள். தொடர்ந்து கர்த்தர் எனது வாழ்க்கையை ஆசீர்வதிக்க ஆரம்பித்தார். சென்னையில் நல்ல ஒரு கம்பெனியில் வேலை கிடைத்தது. எங்களது குடும்ப வறுமை நீங்கியது. ஒரு சில வருடங்களில் சென்னையில் சொந்தமாக இடம் வாங்கி, வீடு கட்ட கிருபை செய்தார். ஏற்ற வேளையில் திருமண காரியமும் ஒழுங்கானது. கர்த்தருக்கு பயந்த பெண் எனக்கு மனைவியானார். எங்களுக்கு இரண்டு குழந்தைகளையும் கர்த்தர் கொடுத்து ஆசீர்வதித்தார். நான் சோர்ந்து போகும் வேளையில் எல்லாம் சகோதரர் அவர்களை சந்திப்பேன். அவர்கள் எனக்கு ஆலோசனை கூறி, ஜெபித்து, கலங்காதே என்று அநேக முறை தைரியப்படுத்தி இருக்கின்றார்கள். தேவ கிருபையால் இன்று சகலவிதத்திலும் ஆசீர்வதிக்கப்பட்டு வாழ்கின்றேன். இம்மட்டும் என்னை ஆசீர்வதித்து வழிநடத்தின தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்!



- திரு. திருப்பதி பாண்டியன், திருச்சி

# வருந்துகிறோம்



எங்கள் அருமையான சம்பந்தியும், அன்புக்குரிய போதகருமான
**Rev.Dr.A.அதிசயராஜ் ஐசக் அவர்கள்,**
நவம்பர் மாதம் 20-ம் தேதி மகிமையில் பிரவேசித்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.


# பழைய மற்றும் புது வருட ஆசீர்வாத ஆராதனை

நாள்: 2021
**டிசம்பர் 31**
(வெள்ளிக்கிழமை)

நேரம் : இரவு 10.30 மணி முதல்

இடம் : டெலிவரன்ஸ் சர்ச்
அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு
தில்லைநகர், திருச்சி.

புதுவருட வாக்குத்தத்த செய்தி

**Rev. Dr. A. ஜாஷ்வா**



குறிப்பு : இப்புத்தாண்டு ஆராதனையில் பரிசுத்த திருவிருந்து ஆசரிக்கப்படும்

புத்தாண்டு ஆசீர்வாதத்தை பெற்றிட அன்புடன் அழைக்கிறோம்

# அன்பரின் ஊழியம்



## உங்கள் ஆசிரியரிடமிருந்து...

- ★ நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்.
- ★ தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும். - ஏசாயா 9:6,7

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பான சகோதர, சகோதரிகளே!

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

சர்வ வல்லமையுள்ள தேவன் தாமே இந்த பலத்த மழை காலத்திலும், குளிரிலிருந்தும் மற்றும் கொரோனா நோய் தொற்றிலிருந்தும் உங்களை விடுவித்து காப்பாராக!

நாம் வணங்குகின்ற நம்முடைய மெய் தெய்வமாகிய இயேசுகிறிஸ்து இதே போன்ற ஒரு நன்நாளில் பாலகனாய் உலகிற்கு வந்தார். **(1தீமோத். 3:16).** நம்முடைய எல்லா துன்பங்களையும், துயரங்களையும் ஏற்றுக்கொண்டு நமது பாவங்களை சிலுவையில் சுமந்து ஒரு மனிதனாலும் ஜெயிக்க முடியாத மரணம் என்னும் நீங்காத போரிலிருந்து நம்மை விடுவிக்கவே வந்தார். இயேசு மிகவும் எளிமையான விதத்திலேயே பிறந்தார். மரியாளும் யோசேப்பும் தேவன் தங்களுக்கு தந்த குழந்தையை வைத்து பாதுகாக்க, சத்திரத்தில் கூட இடம் இல்லாமல் கஷ்டப்பட்டனர். கழுதைகள், ஆடுகள் மற்றும் மாடுகள் போன்ற கால்நடைகள் இருக்கும் முன்னணையில் குழந்தையை கிடத்தினர். **(லூக்கா 2:7)** உலகத்தையே தம்முடைய வார்த்தையால் உண்டாக்கி ஆளுகின்ற


ஆசிரியர் / வெளியிடுபவர்: **Dr. ஜேன் ஜாஷ்வா**

| சந்தா விபரம் | | | |
|---|---|---|---|
| இந்தியா | : | ஆண்டு சந்தா ரூ.200/-. | ஆயுள் சந்தா ரூ.2,000/-. |
| வெளிநாடு | : | ஆண்டு சந்தா ரூ.1,500/-. | ஆயுள் சந்தா ரூ.15,000/-. |



அவசர ஜெப உதவிக்குத் தொலைபேசி எண்கள்: **(0431) 2765386, 2765952, 2760603, 2760604, 2760605** (24 மணி நேரமும்)

**Telugu & Hindi** : 99445 36343, **Malayalam** : 94889 32937, **Kannada** : 90031 17205

e-mail: **info@mojindia.org** website: **www.ministryofjesus.in**

முகவரி:- அன்பரின் ஊழியம், 40, S.P.K. தெரு, உறையூர், திருச்சி - 620 003. Address:- Ministry of Jesus, 40, S.P.K. Street, Woraiyur, Trichy - 620 003.

மகா பிரபுவாகிய இயேசு ஏழ்மையின் கோலமானார். இயேசுவாகிய அவர் இப்படி எளிமையாக பிறந்தபடியால்தான், இதயத்தில் நொறுங்குண்ட எளிமையான மானிடர் அனைவருக்கும் இரட்சிப்பு கிடைத்தது.

இயேசு ஏழையின் கோலமாய் பிறந்த படியால் அந்த காலத்தில் பிரதான பதவிகளில் இருந்த, சமுதாயத்தில் முக்கியத்துவம் வாய்ந்த வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் மத்தியில் நிராகரிக்கப்பட்டார். எனினும் அவர் பிறந்த பொழுது காபிரியேல் என்னும் தூதன் யோசேப்பிற்கும், மரியாளுக்கும் காட்சியளிக்கிறார். அத்துடன் கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் அவரை வணங்கும்படி பல ஆயிரம் மைல்கள் கடந்து வருகிறார்கள். அதுமாத்திரமல்ல, தேவனுடைய பிறப்பை உறுதிப்படுத்த தேவனாகிய கர்த்தர் தமது மிகவும் பலத்த சிருஷ்டியாகிய ஒரு விண்நட்சத்திரத்திற்கு கட்டளையிடுகிறார். மேலும், மேய்ப்பர்கள் மத்தியில் பரமசேனையின் திரள் காட்சியளித்து **"உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" (லூக்கா 2:14)** என்று சொல்லி தேவனை துதிக்கின்றார்கள். அதன்மூலம் இயேசுவே தேவனுடைய குமாரன் என்று நிரூபிக்கப்படுகிறார். அவருடைய மாசற்ற இரத்தத்தால் நமக்கும் காணக்கூடாத மகிமையுள்ள தேவனுக்கும் இடையில் சமாதானம் ஏற்பட்டது. **(ரோமர் 5:1)**

அன்பானவர்களே! இன்றும் இயேசுவின் பிறப்பு துயரப்படும் உள்ளங்களுக்கு அதிக ஆறுதலை தருகிறது. இந்த காலத்திலும் குளிரும், ஆங்காங்கே மழை வெள்ளங்களும் உங்களை பயத்திற்குள்ளாக்கலாம். ஆகவே இயற்கை சீற்றங்கள், பலவிதமான வியாதிகள், கொள்ளை நோய்களிலிருந்து தேவன் தாமே உங்களை பாதுகாக்க ஜெபிக்கின்றோம். **(ஏசாயா 32:2 25:4, எரேமியா 33:6, யாத். 23: 25)**

இந்த வருடத்தில் 11 மாதங்களும் ஆச்சரியமான முறையில் கர்த்தர் நம்மோடு இருந்து நம்மை பாதுகாத்தமைக்காக அவரை துதிப்போம்.

**டிசம்பர் மாதத்தின் கடைசி சனிக்கிழமை கிறிஸ்துமஸ் நாளாக இருக்கிறபடியால் அன்று திருச்சி குடும்ப ஆசீர்வாதக்கூட்டம் நடை பெறாது. அதற்குப் பதிலாக டிசம்பர் மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமை டிசம்பர் 18-ம் தேதி அன்று ஆண்டிறுதி ஸ்தோத்திர ஜெபத்தை வைத்துள்ளோம். புத்தாண்டு ஆசீர் வாத ஜெபம் ஜனவரி 1ம் தேதி சனிக்கிழமை மாலை திருச்சி யிலுள்ள நமது ஜெப ஸ்தலத்தில் வைத்துள் ளோம்.**

நமது நாட்டில் கடந்த இரண்டு வருடங்களாக நம்மை வேதனைப்படுத்துகிற கொரோனா



முற்றிலும் ஒழிய ஜெபிப்போம். அநேகர் தங்கள் உறவினர்களை இழந்து தவிக்கிறீர்கள், கர்த்தர் தாமே உங்களை ஆறுதல்படுத்துவாராக. இந்த ஆண்டு முழுவதும் தேவன் நமக்கு செய்த எல்லா மகத்துவமான செயல்களையும் நினைத்து அவரை துதியுங்கள். **(சங்கீதம் 105:1,2).**

தேர்வு எழுதும் மாணவர்களின் வெற்றிக்காக ஜெபிக்கின்றோம். வேலை இழந்த அனைவருக்கும் நல்ல வேலை கிடைக்க, இந்த குளிர் காலத்தில் நம்முடைய ஊழியத்தை தாங்கின பெரியோர்களின் சுகத்திற்காக ஜெபிக்கிறோம். விசேஷமாக வருகிற ஆண்டாவது நமக்கு எந்த தடையும் இல்லாமல் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் உதவி செய்ய ஊக்கமாய் ஜெபிப்போம். நமது S J Saves Trust மூலமாக செய்யப்படுகின்ற நற்பணிகளுக்காகவும், கிராமப்புற மருத்துவமனையும் செயல்பாடுகள் பெருகும்படி ஜெபியுங்கள். ஊழியத்தில் அதிக தேவைகள் உள்ளது, சந்திக்கப்பட ஜெபியுங்கள். வெளிப்படையான ஆடம்பரமான பண்டிகையாக கிறிஸ்துமஸ் கொண்டாடுவதை தவிர்த்து, எளிமையான வாழ்க்கை வாழுகிற எளியவர்களான தேவனுடைய பிள்ளைகளையும், சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட பிள்ளைகளையும் நினைவுகூர்ந்து அவர்களுக்கு உதவுவோம்.

கடந்த ஆண்டு தொடர்ந்து ஊழியத்தை இடைவிடாமல் செய்ய நமக்கு கர்த்தர் உதவி செய்தார், அதற்காக அவரை துதிப்போம். உங்களில் நற்கிரியை ஆரம்பித்தவர் அப்படியே முடிவு பரியந்தம் நடத்துவாராக. சகல பயணங்களிலும் கர்த்தர் எங்களை பாதுகாத்தார். தொடர்ந்து எங்களது பாதுகாப்பிற்காக, சுகத்திற்காக ஜெபியுங்கள். உங்கள் ஜெபமே உலகத்தை ஜெயிக்கும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தேவன் நமக்கு தந்த சொல்லி முடியாத ஈவாகிய இயேசுவை நினைத்து நாம் இக்காலத்தில் ஏழை எளிய மக்களுக்கு நம்மால் இயன்ற உதவியை செய்வோம். அதோடு கிறிஸ்துமஸ் விழாவை கொண்டாட முடியாமல் கிறிஸ்துவின் வசனத்தின் நிமித்தமும், சாட்சியின் நிமித்தமும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சொல்லியதின் நிமித்தம் சிறையில் அடைக்கப்பட்ட நம் அன்பு சகோதர, சகோதரிகளின் குடும்பங்களுக்காய் ஜெபிப்போம். உலகில் நடைபெறுகின்ற அநீதிகள் ஒழிந்து இயேசுகிறிஸ்துவின் சமாதானம் உலகம் எங்கும் பரவும்படி அதிக ஊக்கமாய் ஜெபிப்போம்.

சர்வவல்ல தேவன் இந்த மாதமும் உங்களை பாதுகாத்து 2022ஆம் ஆண்டு சகல ஆசீர்வாதங்களோடு தேவனுடைய கிருபையுடன் புத்தாண்டை காணும்படி கிருபை செய்வாராக. மீண்டும் எங்கள் வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

## இம்மாத வாக்குத்தத்தம்

**லூக்கா 2:10, 14**
**மத்தேயு 1:21, 23**
**யோவான் 3:14; 2தெச. 3:16**
**ஏசாயா 60:1–5**

## இதயம் தொட்ட எண்ணம்

**பயப்படாதே ஒரு அற்புதம் சமீபித்திருக்கிறது;**
**பயப்படாதே நீ மறக்கப்படுதில்லை;**
**பயப்படாதே நீ தெரிந்து கொள்ளப்பட்டவன்/ள்.**

Fear not, a miracle is near;
Fear not, you are not forgotten;
Fear not, you are chosen.

கிறிஸ்துவின் பணியில்
**Dr. ஜேன் ஜாஷ்வா**

**ஊழியத்திற்கு காணிக்கை அனுப்புகிறவர்கள் கீழ்க்காணும் மூன்று வங்கிக் கணக்குகளில் அனுப்பலாம்**

| Dr. ANANDA STIRA | ANBARIN OOZHIYAM | MINISTRY OF JESUS |
|---|---|---|
| Account No. | Account No. | Account No. |
| 10848469699 | 10848559426 | 10848474869 |

**State Bank of India, Cantonment, Trichy Main Branch**
**IFS Code : SBIN 0000930**

மேற்கண்ட வங்கியின் மூலமாக நீங்கள் காணிக்கை அனுப்பிய உடன் எங்களது Cell No : 9500487061 என்ற எண்ணிற்கு காணிக்கை அனுப்பிய விவரத்தை கூறலாம். அல்லது SMS மூலம் தெரிவிக்கலாம்.

**உங்கள் காணிக்கைகளை அனுப்ப மேலும் ஒரு எளிய வழி**

← இந்த QR Code – ஐ உங்கள் செல்போனில் ஸ்கேன் செய்து அல்லது Cell No : 9500487061 என்ற எண் மூலமும் அனைத்து பணப்பரிமாற்றம் செய்யும் செயலிகள் (Google pay, Paytm, PhonePe etc.,) மூலமாகவும் எங்கள் மேற்கண்ட வங்கிக் கணக்குகளுக்கு காணிக்கை அனுப்பலாம்.




## அன்பரின் ஆறுதல் TV நிகழ்ச்சி நேரங்கள்

**நம்பிக்கை TELEVISION**

திங்கள், செவ்வாய், புதன்
காலை 6.30 – 7.00

புதன்
மதியம் 12.00 – 12.30

வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.30 – 9.00

**தெலுங்கில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**ARADANA TV**
புதன், வியாழன், வெள்ளி
இரவு 7.00 – 7.30

**மலையாளத்தில் அன்பரின் ஆறுதல் நிகழ்ச்சிகள்**

**HARVEST TV**
சனி இரவு 07.30 – 08.00



# இதோ உன் ராஜா வருகிறார்

**கிறிஸ்துமஸ் செய்தி : Dr. ஜேன் ஜாஷ்வா**

**சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார். - சகரியா 9 : 9**

பிரியமான தேவ ஜனங்களே, அருமையான அன்பரின் ஊழிய பங்காளர்களே, உங்கள் அனைவருக்கும் எங்களுடைய கிறிஸ்துமஸ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

இந்த மாயையான உலகில் நம் அனைவருக்கும் சந்தோஷமான நம்பிக்கைக் குரிய ஒரு நாள் எதுவென்றால் அது கிறிஸ்து பிறந்த நாளே! இது இயேசுவை நம்புகின்ற, விசுவாசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் உள்ள பாக்கியம். நம் தேவனாகிய இயேசு கிறிஸ்து 2021 ஆண்டுகளுக்கு முன்பாக மனு உருவாய் இந்த உலகத்திலே தோன்றினார். தேவன் மனிதனுடைய பாவங்களை போக்குவதற்காக தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுவை இவ்வுலகத்திற்கு தம்முடைய சாயலாக மனிதனாய் அனுப்பினார். இயேசுவும் கன்னியாகிய மரியாளின் வயிற்றில் பிறந்து பாவமில்லாத ஒரு மனுஷனாய் இவ்வுலகத்தில் வாழ்ந்து சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்தார். இன்றும் ஜீவனுள்ள தேவனாய் இருக்கின்றார். இப்படிப்பட்ட இந்த இயேசுவின் பிறப்பை ஆசரிக்கிற நாள் தான் கிறிஸ்துமஸ் நன்னாள்!

கிறிஸ்துவை விசுவாசிக்கிற நமக்கோ கிறிஸ்துமஸ் வெறும் பண்டிகை நாளாய் மாத்திரமல்ல அநேக விசேஷங்களை நமக்கு கற்பிக்கிற நாளாய் இருக்கிறது. இந்த குறிப்பை நாம் நினைவில் கொண்டு கருத்தாய் இந்த பண்டிகை நாட்களை ஆசரிப்போம். இந்த மாதத்திலும் உங்களோடு கூட ஒரு புதியவிதமான கிறிஸ்துமஸ் செய்தியை சொல்ல பரிசுத்த ஆவியானவர் என்னை ஏவினார். மேலே நீங்கள் படித்த வசனத்தின்படி இயேசுவின் பிறப்பை குறித்து சகரியா தீர்க்கதரிசி இவ்வாறு கூறி இருக்கிறார். இந்த வசனத்திலே இயேசு மனிதனாக இந்த உலகத்திலே பிறந்து ஜீவித்தபொழுது எப்படி இருந்தார் என்றும் அவரை எப்படி ராஜாவாக ஜனங்கள் பார்க்க வேண்டும் என்பதை குறித்தும் தீர்க்கதரிசியின் மூலம் ஆவியானவர் திருவுளம் பற்றினார். எருசலேமின் மக்கள் அனைவரும் களிகூர்ந்து, மகிழ்ச்சியாக கிறிஸ்து என்கின்ற ராஜாவானவர் நீதியுள்ளவரும், தாழ்மையுள்ளவரும், இரட்சிக்கிறவருமாய் அவர்களிடத்தில் கடந்து வருவார் என்று கூறுகிறார். இந்த இயேசு என்கின்றதான ராஜா 2021 வருடங்களுக்கு முன் எப்படி வந்தார்? இனி எப்படி வரப் போகிறார்? என்பதை குறித்து நாம் இந்த செய்தியிலே பார்க்கப்போகிறோம்.

## தாழ்மையின் கோலமாய் வந்தவர் ராஜாதி ராஜாவாக வரப்போகிறார்!

கன்னிமரியாளின் வயிற்றிலே உருவான இயேசு மிகுந்த தாழ்மையான நிலையில் பிறந்தார். அவர் ஒரு குழந்தையாக இருந்தபோது உலகப் பிரகாரமாக எல்லாவற்றுக்கும் தனது பெற்றோரையே சார்ந்திருக்கிற நிலை. இந்த இயேசு பாலகன் பிறக்கும் பொழுது அவரை வைப்பதற்கு கூட இடம் இல்லாமல் யோசேப்பும்

மரியாளும் அவரை முன்னணையில் கிடத்தினார்கள் என்று வேதம் கூறுகிறது.

**அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லா திருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள் - லூக்கா 2 : 7**

இயேசு ஏழ்மையின் கோலமாய் உருவெடுத்தார். தம் பிறப்பையே ஒரு உதாரண மாக காட்டினார். அதுமாத்திரமல்ல, சகல மகிமை பொருந்தினவராய் பூமிக்கும் பரலோகத்திற்கும் சொந்தக்காரராய் இருந்தவர் ஒரு வசதியும் இல்லாத ஏழ்மையான சூழலில் பிறந்தார். இப்படி பிறப்பிலேயே தன்னை தாழ்த்தின இயேசு குழந்தையாக இருக்கும் பொழுதே ராஜாவினால் தேடப்பட்டார். எதற்கு? கொலை செய்யப்பட! உலகத்திலே இயேசு பிறந்த பொழுது மேய்ப்பர்களுக்கு தேவ தூதன் மூலமாகவும், சாஸ்திரிகளுக்கு நட்சத்திரங்களின் மூலமாகவும் தேவன் மேசியாவை குறித்து வெளிப்படுத்தினார். சாஸ்திரிகளின் மூலமாய் இதை கேள்விப்பட்ட ஏரோது ராஜா தம்மை காட்டிலும் ஒரு வல்லமையான ராஜா வந்துவிடுவாரோ என்று நினைத்து **மத்தேயு 2 : 12-18** வசனங்களில் நாம் பார்க்கிறபடி இயேசுவை கொலை செய்ய முயற்சி செய்கிறான். இதனிமித்தம் பச்சிளங் குழந்தையாக இருக்கிற இயேசுவை தூக்கிக் கொண்டு மரியாளும் யோசேப்பும் எகிப்திற்கு செல்ல வேண்டியதாக இருக்கிறது. அங்கே இருந்து திரும்பி வந்த பிறகும் **மத் 2:22,23** வசனங்களில் பார்க்கிறபடி தங்களுடைய சொந்த ஊரிலே வாசம் பண்ண முடியாமல் அவர்கள் கலிலேயாவிலுள்ள நாசரேத் என்னும் ஊரில் வந்து வசிக்கிறார்கள். இப்படி தனக்கு சரியான பாதுகாப்பான இடம் கூட இல்லாமல் இயேசு அலைய வேண்டியதாயிற்று.

அவர் பெரியவராகி எல்லா இடங்களிலும் ஊழியம் செய்த போதும் கூட மனுஷகுமாரனுக்கு தலை சாய்க்க இடம் இல்லையென்று **மத் 8 : 20ம்** வசனங்களிலே நாம் பார்க்கிறோம். அதே போல இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்த பொழுது எல்லாராலும் வெறுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு கேலி செய்யப்படுபவராக இருந்தார். அநேக ஜனங்கள் அவரை பின்பற்றினாலும் கூட அவர் மீது பொறாமைப்பட்ட பரிசேயர்களும் சதுசேயர்களும் அக்காலத்து பெரியவர்களும் அவரை நிந்தித்து தூஷித்திருந்தார்கள். ஒரு சமயத்தில் இயேசுவை பரிசேயர்கள் **மத் 12 : 24ல்** பார்க்கிறபடி **பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளை துரத்துகிறான் என்று ஏளனம் செய்கிறார்கள். இன்னொரு சமயத்திலே நீர் எந்த அதிகாரத்தினாலே இவைகளை செய்கிறீர்கள் என்று கேள்வி கேட்கிறார்கள்.** அநேக சமயங்களில் அவரை விசுவாசிக்காமல் அவரை குறித்து இடறல் அடைந்தார்கள்.

இப்படி ஏழ்மையின் கோலமாய் தங்குவதற்கு இடம் இல்லாமல் எல்லாராலும் ஒதுக்கப்பட்ட நிலைமையை தம் முதலாம் வருகைக்கு தெரிந்து கொண்ட தேவன், தம்முடைய இரண்டாம் வருகையில் எப்படி வரப்போகிறார்? **மத்தேயு 24 : 27,30,31** அவரே தம்முடைய சீஷர்களுக்கு கூறின பொழுது **மனுஷ குமாரன் வல்லமையோடும், மகிமையோடும் வருவார்** என்று கூறுகிறார். அதே போல **வெளி. 19:12,16ம்** வசனத்தில் **சத்தியமுள்ளவராய், யுத்தம் பண்ணுகிறவராய் கீரிடத்தை உடையவராய் அரசாளுகிறவருமாய், ராஜாதி ராஜாவாக வரப்போகிறார்.**

**இந்த ராஜாதி ராஜாதான் மகிமையின் ரூபமாய் வருகிறார். தாழ்மையின் கோல மெடுத்த பாலகனாய் அல்ல. அரசாளுகிற மன்னனாய் நம்மை சந்திக்க வரப்போகிறார். இந்த ராஜாவை எதிர்கொள்ள நீங்கள் ஆயத்தமா?** நாம் படங்களிலும், குடில்களிலும், பொம்மைகளிலும் பார்க்கிறது போல இயேசுவை குழந்தையாகவே பார்த்துக்கொண்டு இருக்கி றோமா? அவர் ஒன்றுமறியாத பாலகனாகவே உங்கள் இருதயத்தில் வாசம் பண்ணுகிறாரா? அப்படி இருந்தால் அந்த எண்ணத்தை இன்றே

கலைந்துவிடுங்கள். **வரப்போகும் ராஜாவுக்காய் காத்திருக்கிற கூட்டமாய் மாறுங்கள்.**

## பாவிகளை இரட்சிக்க வந்தவர், நியாயந்தீர்க்கும் நீதிபதியாய் வருகிறார்

பாவமே இல்லாத இயேசு பாவிகளான மனுஷருக்காய் சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டார். அவர் பரிசுத்தவானாய் பாவமில்லாமல் ஜீவித்தபோதும் கூட நம்முடைய பாவங்களுக்காய் கொடூரமான சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டார். **ரோமர் 4 : 27ல்** நாம் வாசிக்கிறபடி அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டார். யோவான் இயேசுவை குறித்து தன்னுடைய சீஷர்களிடத்தில் கூறுகையில் **"இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி"** என்று கூறுகிறார். **பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2கொரி 5 : 21)** அவர் நம்முடைய பாவங்களை சுமந்தபடியினால் நாம் நம்முடைய பாவங்கள் நீங்க கழுவப்பட்டு சுத்தமானவர்களாக மாறுகிறோம். நம்முடைய மீறுதல்களையும், அக்கிரமங்களையும் அவர் சுமந்தார். **(ஏசாயா 53 :5)** இந்த பாடுபட்ட கிறிஸ்து உங்கள் உள்ளத்தில் இருக்கிறாரா? அவருடைய சிலுவையின் இரத்தத்தினால் நீங்கள் கழுவப்பட்டு இருக்கிறீர்களா? கழுவப்பட்டவர்களாக இருப்பின் திரும்பவும் நியாயாதிபதியாக வருகிறவராகிய அவரை நீங்கள் சந்திக்க முடியும்.

**பாவிகளை இரட்சிக்க முதலாம் வருகையில் வந்த இயேசு பாவிகளை நியாயம் தீர்க்கவும் சாத்தானின் ராஜ்ஜியத்தை அழிக்கும்படியும் வரப்போகிறார். மத் 13: 41,42ல்** நாம் பார்க்கிறது போல **களைகளை அக்கினியில் சுட்டெரிக்க அவர் வருகிறார். மத் 25 : 46ம் வசனத்தில் பார்க்கிறபடி நித்திய ஆக்கினையை அடையவும் நித்திய ஜீவனை அடையவும் மனுஷனை நியாயம் தீர்த்து பிரிக்கப் போகிறார்.** அநுக்கிரக காலம் இருக்கும் பொழுதே அவருடைய இரட்சிப்பை நாம் ஏற்றுக்கொள்வோம். ஜீவ புத்தகத்தில் உங்கள் பெயர் எழுதப்படாவிட்டால் அக்கினி கடலிலே தள்ளப்படுவீர்கள்.

**மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக் கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப் பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின் படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள் - வெளி 20 : 12**

**சாத்தானையும் அவனுடைய சேனைகளையும் அவர் முறியடித்து பூமியின் மேல் அவனுடைய ராஜ்ஜியம் முற்றிலுமாய் நிர்மூலமாக்கப்பட அதை அழிப்பதற்காகவே தம் சேனைகளோடு வருகிறார். (வெளி 19 :20, 21 20 : 2, 14 : 14-19)**

ஆம் பிரியமானவர்களே, இயேசு என்னை மன்னிப்பார், என்னை இரட்சிப்பார் சிறிது காலம் பாவம் செய்தாலும் பரவாயில்லை என்று சொல்லி கொண்டு நேரத்தை வீணாக்காதீர்கள். கிருபையின் காலம் சீக்கிரமாய் முடிவடைகின்றது. உலகத்திலே நடக்கின்ற காரியங்களை பார்க்கும்பொழுது முடிவு மிக மிக சமீபமாமய் இருக்கிறது. பிசாசு இந்த உலகத்தை முழுமையாய் ஆட்கொள்ளும் காலம் நெருங்கிவிட்டது. அநேகர் நாங்கள் 11ம் மணி நேரத்தில் இருக்கிறோம் என்று கூறுவர். நாம் 11ம் மணி நேரத்தில் 59ம் நிமிடத்தில் இருக்கின்றோம். எனவே மிகுந்த ஜாக்கிரதையாய் அவருடைய வருகைக்காக ஆயத்தமாவோம். இரண்டாம் வருகை என்று சொல்லும் பொழுது அந்திகிறிஸ்துவின் காலத்திற்கு பின்பாக தம்முடைய ராஜ்ஜியத்தை இவ்வுலகத்தில் நிலைநாட்டி நியாயம் தீர்க்க வருகிற இயேசுவின் வருகையை நாம் குறிக்கின்றோம். அதற்கு முன்பாக தமக்கு பயந்தவர்கள் தமக்கென்று முத்திரை

போடப்பட்டவர்கள் அவர் தம் பரலோக ராஜ்ஜியத்திற்கு சேர்த்துக்கொள்ளும் நேரம் ஒன்று உண்டு. அதைத் தான் **மத் 24:31ம்** வசனத்தில் நாம் வாசிக்கிறோம்.

**"அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்"**

**- மத் 24 : 31**

**அவருடைய நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள் அந்தி கிறிஸ்துவின் காலத்தில் ஏற்படப்போகின்ற மிகப்பெரிய உபத்திரவத் திலிருந்து தப்புவிக்கப்படுவார்கள்.**

**(வெளி 7 : 9,17; வெளி 7:3)**

எனவே, இந்த இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டு அவரோடுகூட அவரின் சேனைகளாய் இரண்டாம் வருகையில் திரும்பி வருவோம் என்ற நிச்சயத்தை இன்றே பெற்றுக் கொள்வோம். அது இல்லை என்றால் நீங்கள் கைவிடப்பட்டவர்களாய் பிசாசின் கரத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களாய் மாறுவீர்கள்.

**அப்பொழுது, இரண்டுபேர் வயலில் இருப்பார்கள் ஒருவன் ஏற்றுக் கொள்ளப் படுவான், ஒருவன் கைவிடப்படுவான். இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைத்துக் கொண்டிருப்பார்கள் ஒருத்தி ஏற்றுக் கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப் படுவாள் - மத் 24 : 40, 41**

இயேசு முதலாம் தரம் உலகத்திற்கு வந்தபொழுது ஒருசில மக்களுக்கே அவருடைய வருகை அறிவிக்கப்பட்டது. தீர்க்கதரிசிகளில் அநேகர் அவரை குறித்து தீர்க்கதரிசனம் அறிவித்திருந்தாலும் ஒரு சிலருக்கு மாத்திரமே விசேஷித்தவிதமாய் தூதர்களின் மூலமாய், பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும், நட்சத்திரத்தின் மூலமாகவும் இயேசுவின் வருகை அறிவிக்கப்பட்டது. ஆனால் இனி அவர் வரப்போகும் வருகையை குறித்து சகல ஜாதியாரும் அறிவார்கள். பூமியெங்கும் ராஜ்ஜியத்தின் சுவிசேஷம் சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படும். **மத் 24 :14ம்** வசனத்தில் நாம் பார்க்கிறபடி அப்போதுதான் முடிவு வரும். சகல ஜாதிகளும் அவரை குறித்து கண்டிப்பாக போதிக்கப்பட்டிருப்பார்கள். அந்த போதனையை ஏற்றுக் கொள்வது அல்லது உதாசீனப்படுத்துவது அவரவர்களுடைய கரத்திலிருக்கிறது. அதே போல இயேசு 2021 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தபொழுது மேய்ப்பர்கள், சீஷர்கள், சாஸ்திரிகள், சீமோன், அன்னாள் போன்ற ஒருசிலரே அவரை கிறிஸ்து என்று அறிந்து அவரை அங்கீகரித்து அவரை ஏற்றுக் கொண்டார்கள். வரப்போகும் நாட்களிலே இயேசு ராஜாவாக இவ்வுலகத்தை நியாயம் தீர்க்க வருகையில் சகல கண்களும் அவரை காணும். **மத்தேயு 24 :30ல்** பார்க்கிறபடி சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.

**"இதோ, மேகங்களுடனே வருகிறார் கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள் பூமியின் கோத்திரத்தா ரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்" - வெளி 1 : 7**

**நீங்கள் புலம்புகிற கூட்டத்தில் ஒருவராய் இருக்கப் போகிறீர்களா? அல்லது ஆராவாரிக்கிற கூட்டத்தில் ஒருவராக இருக்கப் போகிறீர்களா? இன்றே முடிவு செய்யுங்கள்.**

## எதிர்பாராத நாழிகையில் வருவார்

கடைசியாக, இரண்டு காரியங்கள் அவருடைய முதலாம் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் ஒன்றாய் இருக்கும். அது என்னவென்றால் இயேசு பிறந்தபொழுது அநேகர் எப்படி விசுவாசியாமல் இருந்து அசட்டை செய்தார்களோ அதே போல இரண்டாம் வருகையை குறித்தும் அநேகர் விசுவாசியாமல் அசட்டை பண்ணுவார்கள். அவர் இந்த உலகில் தோன்றிய நாளை யூதர்கள் அறிந்திருந்தும் கூட அவர் பிறந்ததின் முறையையும், ஊரையும் குறித்து சற்றும்

அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அதே போலத் தான் மனுஷகுமாரன் வரும் நாளையாவது, நாழிகையை குறித்தாவது யாரும் அறியார்கள். திருடனை போல வருவார். அதை நாம் அறியாத படியினால் அவருடைய வருகைக்காய் ஆயத்தமாவோம்! விழித்திருப்போம்!

**நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார் ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள் - மத் 24 : 44**

## தாம் சொன்னபடியே வருகிறார்

தேவன் இயேசு கிறிஸ்துவை குறித்து தீர்க்கதரிசிகளின் மூலமாய் கூறின வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நிறைவேறும்படியாக இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்து மரித்து உயிரோடு எழுந்தார். அவரை குறித்து வேத வசனங்கள் கூறின அனைத்தும் நிறைவேறியது. இரண்டாம் வருகையிலும் தாம் சொல்லிப்போன வாக்குத்தத்தை நிறைவேற்ற அவர் திரும்பவும் வருவார். **யோவான் 14:3ல்** தம்முடைய சீஷர்களை பார்த்து அவர் சொல்கிறார், **"நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்".**

ஆம், நம்மை சேர்த்துக்கொள்ள தாம் வாக்குத்தத்தம் பண்ணின நித்திய ஜீவனை நமக்குத் தர அவர் சீக்கிரம் வரப்போகிறார். **அப் 1:11ல்** தூதர்கள் சீஷர்களை பார்த்து சொன்னது போல **"இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்திற்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார்".** அவருடைய வருகையை ஏற்றுக் கொள்ள வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

இந்த செய்தியை படித்த பின் உங்கள் மனதிலும் உங்களையே நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். **இயேசு பாலகனை சுமந்த நீங்கள் அவருடைய பரிசுத்த இரத்தத்தினால் கழுவப் பட்டிருக்கிறீர்களா? அவருடைய பிள்ளைகளாய் ஜீவிக்கிறீர்களா? ஜீவப்புத்தகத்தில் உங்கள் பெயர் எழுதப்பட்டு இருக்கிறதா? இவை அனைத்திற்கும் ஆம் என்று உங்கள் பதில் இருக்கு மென்றால் சந்தோஷப்பட்டு களிகூருங்கள். இல்லை யென்றால் இன்றைக்கே அவருடைய பிள்ளையாய் மாறுங்கள்.** பரலோகத்திற்கு செல்ல அவர் ஒருவரே வழி! அவரை அன்றி ஒருவனும் மோட்சத்தை அடைய முடியாது. உங்கள் ஆத்துமாக்கள் இன்றே அவருடைய வருகைக்கு ஆயத்தப்படட்டும். படத்திலே காணப்படுகின்ற இயேசு பாலகனாக மாத்திரம் இல்லாமல் உங்களை அரவணைக்கப் போகும் இயேசு ராஜனாய் உங்கள் வாழ்க்கையில் அவர் இருக்கட்டும். இதோ அவருடைய வருகை மிக சமீபமாய் இருக்கிறது. **இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின் படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது. (வெளி. 22:12)** ஆம்! அவனவனுடைய பலன் அவரோடுகூட வரும். ஆகவே இந்த கிறிஸ்துமஸ் நாட்களிலே இயேசுவின் வருகையை நினைத்து அவரை சந்திக்க ஆயத்தப்படுங்கள். மாரநாதா! ஆமென்! கர்த்தராகிய இயேசுவே வாரும்!

குறிப்பு : நாகர்கோவில் பகுதியில் உள்ள வயதானவர்கள், வியாதியினால் கஷ்டப்படுபவர்கள் வீட்டிற்கு வந்து ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் எங்கள் பிரதிநிதியை தொடர்புகொள்ளுங்கள். அவர்கள் உங்கள் இல்லத்திற்கு வந்து ஜெபிப்பார்கள்.
(அலைபேசி எண் : 82203 17472)

# Praise Report - துதி அறிக்கை

## 20 வருட சரீர வேதனை ஜெப வேளையில் அழைத்து அற்புத விடுதலை!



20 வருட காலமாக எனக்கு இடுப்பு மற்றும் கால் மூட்டு களில் ஏற்பட்ட வலியினால் என்னால் சரியாக நடக்க முடியாது. தொடர்ந்து சிகிச்சை மேற்கொண்டேன். மருந்து மாத்திரைகள் சாப்பிட்டும் குணமாகாமல் கண்ணீருடனும், வலி வேதனையுடனும் நாட்களை கடத்தி வந்தேன். இடுப்பு வலி மற்றும் கால் வலி வரும் பொழுது என்னால் தாங்கவே முடியாது. அந்த அளவிறகு வேதனைப்படுவேன். இந்நிலையில் சகோதரி கல்யாணி அவர்கள் மூலம் திருச்சி அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தை குறித்து கேள்விப்பட்டு தர்மபுரி மாவட்டத்திலிருந்து திருச்சிக்கு நவம்பர் 27ம் தேதி வலி, வேதனையுடன் வந்து கலந்து கொண்டேன். ஜெப வேளையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் "இங்கு ஒரு தாய் பல ஆண்டு காலமாக நடக்க முடியாமல் மிகவும் வலியுடன் வந்திருக்கிறார்கள், கர்த்தர் உங்களை சுகமாக்குகின்றார்" என்று என்னை குறிப்பிட்டு அழைத்தார்கள். அந்த நேரம் என்மேல் ஏதோ ஒன்று இறங்குவது போல உணர்ந்தேன். சகோதரர் என்னை அழைத்து ஜெபித்தார்கள். அந்த நேரம் 20 வருடமாக நான் அனுபவித்து வந்த வலி உடனடியாக நீங்கியது. நடக்க முடியாத என்னால் நன்றாக நடக்க முடிந்தது. இடுப்பு வலி நீங்கியது. மீண்டும் மீண்டும் நடந்து பார்த்தேன். என்னால் நன்றாக நடக்க முடிந்தது. என்னுடைய 20 ஆண்டு கால வேதனையை நீக்கின தேவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

- திருமதி. லட்சுமி, தர்மபுரி

## இரண்டு குழந்தைகளுக்கும் அற்புத சுகத்தை தந்த தேவன்!

எனது மூத்த மகன் சாமுவேல் ஜெபிக்ஷனுக்கு முதலில் காய்ச்சல் வந்தது. பிறகு வயிற்று போக்கும், மலம் கழிக்கும்போது இரத்தமும் வந்தது. மூன்று வயதான அவன் இதனால் மிகவும் கஷ்டபட்டான். மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். சிறு குழந்தையாக இருப்பதால் மருந்து மாத்திரை சாப்பிடமாட்டான். இதனால் சுகமாகாமல் இருந்தபடியால் அவனிமித்தம் நாங்கள் மிகவும் வேதனையடைந்தோம். இந்நிலையில் அவனுக்கு காய்ச்சல் 102 டிகிரி வந்துவிட்டது. இந்நிலையில் பொருத்தனை செய்து ஜெபித்தோம். கர்த்தர் பொருத்தனையை அங்கீகரித்து அன்பு குழந்தைக்கு அற்புத சுகத்தை அருளினார்.

எனது ஒரு வயதான இளைய மகன் கால்டுவெல்லுக்கு செப்டம்பர் மாதம் 28ஆம் தேதி திடிரென காய்ச்சல் வந்தது. காய்ச்சல் லேசாகத்தான் இருக்கிறது என்று நினைத்தேன். மேலும் இழுப்பு (Fix) வந்துவிட்டது. இழுப்பு வந்தவுடன் குழந்தை மயக்கமாகிவிட்டான். அந்த நேரத்தில் சாட்சி எழுதுவதாக தேவனிடம் ஜெபித்தேன். மருத்துவமனை அழைத்து செல்லவும், சரியான நேரத்தில் சிகிச்சையளித்து குழந்தை சுகம் பெறவும் கர்த்தர் கிருபை செய்தார்.

- திருமதி. ஜெலின், திருநெல்வேலி

## மரணப்படுக்கையை மாற்றி ஜீவனை தந்த அருள்நாதர்

எனது சம்பந்தி விஜயகுமாருக்கு திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்திருந்தோம். அவரது நிலை



மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தபடியால் நாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்தோம். இந்நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்பு கொண்டு சம்பந்திக்காக ஜெபித்துக் கொண்டோம். ஜெபத்திற்கு பிறகு சம்பந்தியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு இப்பொழுது நல்ல சுகத்துடன் இருக்கிறார். சுகம் தந்த தேவனை துதிக்கின்றோம்! எங்களது பொருத்தனை காணிக்கையை ஊழியப் பணிக்கு தருகின்றோம்.

- திருமதி. துளசியம்மாள், கோயம்புத்தூர்

## தீர்க்கதரிசனத்தின்படி சொந்த வீடு கட்டினோம்!

நாங்கள் பல ஆண்டு காலமாக சொந்த வீடு இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தோம். சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு, தனி ஜெப வேளையில் எங்களது ஜெப விண்ணப்பத்தை கூறி ஜெபித்துக் கொண்டோம். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் எங்களுக்காக மிகவும் பாரத்தோடு ஜெபித்து **"கர்த்தர் நிச்சயம் உங்களை ஆசீர்வதிப்பார், சொந்த வீடு கட்டுவதற்கான தேவைகளை சந்திப்பார், கலங்காதீர்கள்"** என்று கூறினார்கள். அவர்கள் சொன்னதுபோலவே **"நாங்கள் இருக்கும் இடத்தில் சொந்தமாக இடம் வாங்கி, வீடு கட்டி முடிக்க கர்த்தர் கிருபை செய்தார்"** கர்த்தர் கொடுத்த இந்த நல்ல ஈவுக்காக ஸ்தோத்திரம்! எங்களது பொருத்தனை காணிக்கையை அன்பரின் ஊழியப் பணிக்கும், **SJ Saves Trust** அறப்பணிக்கும் அர்ப்பணிக்கின்றோம்.

- திருமதி. மாலதி சந்திரசேகர், திருத்தணி

## 25 வருட குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை!



28 ஆண்டுகளுக்கு பிறகு நாங்கள் சொந்த வீடு கட்டும்படியும், கார் வாங்கவும் சர்வ வல்ல தேவன் கிருபை செய்தார். 25 வருட குடிப் பழக்கத்திலிருந்து எனது கணவர் விடுதலையானார். கர்த்தர் செய்த இந்த இரண்டு அற்புதங்களுக்காக அவரை நன்றியோடு ஸ்தோத்தரிக்கின்றோம்.

- திருமதி. ஜெனி ஆல்பர்ட்

## நடக்க முடியாத தாய் எழுந்து நடக்கும்படி அற்புதம் செய்த தேவன்!




நவம்பர் மாதம் நடைபெற்ற திருச்சி அற்புத குடும்ப ஆசீர்வாதக் கூட்டத்தில் சுமார் 15 ஆண்டு காலம் நடக்க முடியாத ஒரு தாய் ஜெப வேளையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்கள் ஜெபத்தினால் எழுந்து நடந்தார்கள். இந்த அற்புதத்தை கண்ட அங்கிருந்த அனைத்து தேவ பிள்ளைகளும் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.




- திருமதி. மாரியம்மா

இதன் தொடர்ச்சி 16ம் ஆம் பக்கம் பார்க்க

கிறிஸ்துமஸ் என்றவுடன் எல்லோருக்கும் முதலில் நினைவுக்கு வருவது, கிறிஸ்துமஸ் குடில், கிறிஸ்துமஸ் பவனி [கேரல்ஸ்], கிறிஸ்துமஸ் தாத்தா, மின் அலங்காரம், புத்தாடை, கேக் மற்றும் விருந்து என்று ஒரே கொண்டாட்டம்தான்! ஆனால் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் துவங்கிய பின்னணியும் அதில் ஏற்பட்ட பல மாறுதல்களைக் குறித்தும் இங்கே அறிந்துக் கொள்வோம்

உலகத்தின் இரட்சகரான நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து பிறந்ததினம் தான் கிறிஸ்துமஸ் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே! இயேசு கிறிஸ்து எப்பொழுது பிறந்தார். கிறிஸ்துமஸ் என்ற வார்த்தையின் பின்னணி ஆகியவை சுவாரஸ்யமானது

கிறிஸ்துமஸ் என்ற வார்த்தை "கிறிஸ்ட் மாஸ்" என்ற இரண்டு வார்த்தைகளின் இணைப்பு மூலம் உருவானது. இயேசுகிறிஸ்து கி.மு. 7-க்கும், கி.மு. 2-க்கும் இடைப்பட்ட காலத்திலே பிறந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

# கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி வரலாற்றில் சில ருசிகரமான சம்பவங்கள் நடைபெற்று உள்ளன.

பண்டைய காலத்தில் வாழ்ந்த பாரசீகர்களும், பாபிலோனியர்களும் கிறிஸ்துமஸ் பண்டிகையை வருடத்தின் நல்ல நாளாக கொண்டாடி வந்தனர். கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று, பாரசீக நாட்டில் உள்ள எல்லா அடிமைகளுக்கும் ஒருநாள் விடுதலை அளிக்கப்படும்.

பண்டைய காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் பேய், பிசாசு, அசுத்த ஆவிகள் போன்றவை களுக்கு அதிகமாக பயந்து வாழ்ந்தவர்கள், வருடத்தில் நீண்ட இரவு கொண்ட நாட்களில் அவை மக்களுக்கு தீமைவிளைவிக்கும் என்று நம்பினர். இதனால் நீண்ட இரவுகளுக்குபிறகு சூரியன் உதிக்க வேண்டும் என்பதற்காக கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடி வந்துள்ளனர்.

யூதர்களின் பருவகாலம், நாள் காட்டிகள் மூலம் கணக்கிட்டு, டிசம்பர் 25-ம் தேதி கிறிஸ்துமஸ் பண்டிகையாக கொண்டாடப்படுவதாக சில வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்

கிறிஸ்துமஸ் பண்டிகையை முதன்முதலில் 4-வது நூற்றாண்டை சேர்ந்த மேற்கத்திய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக சில வரலாற்று குறிப்புகள் உள்ளன. ஆனால் வேறு சில பிரிவுகளை சேர்ந்த கிறிஸ்தவர்கள் ஜனவரி 6-ம் தேதி இயேசு பிறந்ததாகவும் கொண்டாடினர்.



ஜெர்மனியில் பாரடைஸ் ட்ரீ என்று அழைக்கப்படும் ஒரு மரம் இருந்தது. இந்த மரம் எப்போதும் பசுமையாக இருக்குமாம். அதன் காரணமாகவே அதற்கு பாரடைஸ் மரம் என்ற பெயர் வந்தது. இதையொட்டி கிறிஸ்துமஸ் மரம் உருவானது.

துருக்கியில் புனித நிக்கோலஸ் என்ற பாதிரியார் இருந்தார். இவர் தான் முதலாவது கிறிஸ்துமஸ் தாத்தா ஆவார். துருக்கியில் 3 பெண்களைக் கொண்ட ஒரு குடும்பம் வறுமை நிலையில் கஷ்டப்பட்டு வந்ததைப் பார்த்த நிக்கோலஸ் அதிக வேதனைப்பட்டார். அந்த பெண்களுக்கு திருமணம் செய்து வைக்கமுடியாமல் தந்தை வறுமையில் வாடியதை உணர்ந்த அவர். அவர்களுக்கு உதவ முடிவு செய்தார். ஆகவே கிறிஸ்துமஸ் தாத்தா கோலம் பூண்டார்.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக முதன்முதலில் கிறிஸ்துமஸ் மரம் வைக்கும் வழக்கம் 1510-ம் ஆண்டு ரிகா என்ற இடத்தில் துவங்கியது. 1840ம் ஆண்டு இங்கிலாந்தில் முதன் முதலாக கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் பழக்கம் துவங்கியது.

1847-ம் ஆண்டு பிரான்சில் முதல் முதலாக கிறிஸ்துமஸ் கேரல் சர்வீஸ் நடத்தப்பட்டதாக தெரிகிறது. இந்த கேரலில் "ஓ ஹோலிநைட்" என்ற பிரபல கிறிஸ்துமஸ் பாடல் பாடப்பட்டது.

17-ம் நூற்றாண்டில் ஜெர்மன் நாட்டில் வாழ்ந்த மார்ட்டின் லூதர் குளிர்கால இரவில் காட்டுப்பகுதியில் சென்றுக் கொண்டிருந்தார். சர்ச்சில் கூற வேண்டிய போதனைகளை நினைத்துக் கொண்டே நடந்துக் கொண்டிருக்கும் பொழுது கொடிய மிருகங்களின் சத்தம் கேட்டு பயம் சூழ்ந்தது. உடனே தேவனை நோக்கி ஜெபித்தார். அப்பொழுது காட்டிலிருந்த ஒரு மரத்தைப் பார்த்தபோது நீல நிறத்திலும், வெள்ளி நிறத்திலும் விளக்குகள் போல நட்சத்திரங்கள் மின்னுவதைக் கண்டார். இயேசு பிரான் பிறந்த இடத்திற்கு சாஸ்திரகளை அழைத்துச்சென்ற நட்சத்திரம் போல்தான் இவை என உணர்ந்தார். தனது சர்ச் போதனைக்கு இது ஒரு சிறந்த கருத்து என் மார்ட்டின் நினைத்தார். பின்னர் அந்த சிறிய மரத்தை எடுத்துக் கொண்டு தன் வீட்டிற்கு சென்றார். தன் குடும்பத்தினரை அழைத்து மரத்தை சுற்றி நிற்க வைத்து, தனக்கு நேர்ந்த அனுபவத்தை தெரிவித்தார். நட்சத்திரங்களின் ஒளிதேவன் நான் உன்னை கைவிடமாட்டேன் என நம்பிக்கை அளிக்கும் விதமாக அமைந்தது என உடல் சிலிரிக்க தெரிவித்தார்.

**மொத்தத்தில் நல்லது ஓங்க இந்த நன்னாளை உலக மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இயேசு பெருமானை இறைஞ்சி துதிபாடி மகிழ்கின்றனர் என்பது சந்தோஷமான விஷயம் தான்**

13ம் ஆம் பக்கம் தொடர்ச்சி

# 18 ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தை பாக்கியம்! புற்றுநோயிலிருந்து அற்புத சுகம்!



எனது தாயாருக்கு மார்பக புற்றுநோய் வந்து மிகவும் கஷ்டப் பட்டார்கள். மருத்து வர்கள் அறுவை சிகிச்சை செய்ய வேண்டு மென கூறினர். அவர்கள் பிழைத்தால் போதும் என்று அறுவை சிகிச்சைக்கு ஒப்புக் கொண்டோம். எனினும், மீண்டும் பரிசோதனை செய்த மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்தால் தாங்கும் சக்தி அவர்களுக்கு இல்லை என்று கூறி மறுத்து விட்டனர். இதனால் அம்மாவின் ஜீவன் மீண்டும் கேள்விக் குறியாகிவிட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் மிகவும் கலங்கிய நிலையில் இருந்தோம். இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை குறித்து அறிந்து அவர்களை திருச்சி அன்பரின் ஊழிய ஜெப மையத்தில் முன் அனுமதி பெற்று சந்தித்து அம்மாவின் நிலையை கூறி ஜெபிக்கக் கேட்டோம்.** சகோதரர் அவர்கள் அம்மாவின் நிலையை கனிவுடன் விசாரித்து அவர்களுக்காக தேவ சமூகத்தில் கண்ணீரோடு ஜெபித்தார்கள். **அந்த ஜெபத்திற்கு பிறகு மீண்டும் மருத்துவமனை சென்றோம். அங்கு கர்த்தர் மிகப்பெரிய அற்புதத்தை செய்தார். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய அனுமதித்தார்கள். சிகிச்சைக்குப் பிறகு இன்று நான்கு ஆண்டுகளாக அம்மா நலமுடன் இருக்கின்றார்கள்.** எங்களோடு அம்மா வாழும் படி கிருபை புரிந்த தேவனை துதிக்கின்றேன்.



அதுமாத்திரமல்ல, எனக்கு திருமணமாகி 18 ஆண்டுகளாக குழந்தையில்லை. அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலத்தில் **"எனக்கு குழந்தை பிறந்தால் சாட்சி சொல்வதாக" பொருத்தனை செய்தேன். 18 வருட வேதனையை கர்த்தர் இந்த ஸ்தலத்திற்கு வந்து பொருத்தனை செய்து ஜெபித்த பிறகு மாற்றினார். ஒருசில மாதங்களிலேயே நான் கருவுற்றேன். அழகிய பெண் குழந்தையை கர்த்தர் எங்களுக்கு கொடுத்து எங்கள் கண்ணீரை களிப்பாக்கினார்.** அற்புதம் செய்த தேவனை துதிக்கின்றேன்.

**- திருமதி. ஹெலன், மணப்பாறை, திருச்சி**

## தீர்க்கதரிசனத்தின்படி நல்ல வேலை அதிக சம்பளத்துடன் கிடைத்தது!



ஐதராபாத்தில் அன்பரின் ஊழியம் நடத்தும் கூட்டங்களில் தவறாமல் பங்கு கொள்வேன். **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஜெபத்தினால் அநேக அற்புதங்களை கர்த்தர் எங்கள் குடும் பத்தில் செய்துள்ளார். குறிப்பாக, கடந்த ஆண்டு கொரோனா சமயத்தில் எனது வேலை இழக்கும் நிலை ஏற்பட்டு, எனது குடும்பம் பொருளாதாரத் தினால் மிகவும் பாதிக்கப்பட்டு கஷ்டப் பட்டேன். இந்த சூழ்நிலையில் சகோதரர் அவர்களை ஐதராபாத்தில் தனி ஜெப நாளில் சந்தித்து எனது நிலையை சொல்லி ஜெபித்துக் கொண்டேன். அவர்கள் எனக்காக மனதுருக்கத் தோடு ஜெபித்து தீர்க்கதரிசனமாக **"என் மகனே கலங்காதே சீக்கிரத்தில் உனக்கு நல்லதொரு**

வேலை கிடைக்கும், உனது பொருளாதார கஷ்ட நிலை மாறும்படி கர்த்தர் அற்புதம் செய்வார்" என்று கூறினார்கள். அவர்கள் சொன்னது போலவே ஒருசில மாதங்களில் அதிக சம்பளத்துடன், நல்ல கம்பெனியில் வேலை கிடைத்தது. கர்த்தர் செய்த அற்புதத்தை மறவாமல் எனது நன்றி காணிக்கையை செலுத்துகின்றேன். - திரு. டேவிட், ஐதராபாத்

## கர்த்தர் எனக்கு நன்மை செய்தபடியால் அவரைப் பாடுவேன்!

எனது கணவருக்கு வேலை இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தோம். இந்நிலையில் Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை சந்தித்து வேலைக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டோம். சகோதரர் ஜெபித்து தீர்க்கதரிசனமாக "உங்கள் கணவருக்கு நல்லதொரு கிடைக்கும், கலங்காதீர்கள்" என்று கூறினபடி, துபாயில் என் கணவருக்கு நல்ல வேலை கிடைக்க கர்த்தர் கிருபை செய்துள்ளார். கர்த்தர் செய்த நன்மையை மறவாமல் அவருக்கு எங்கள் பொருத்தனை காணிக்கையை செலுத்துகின்றோம்.

- திருமதி. ஜான் ஆபிரகாம்

## செயலிழந்த கால்கள் செயல்பட துவங்கியது!

எனக்கு 60 வயது ஆகிறது. கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு இரத்த அழுத்தம் அதிகமாகி பாதம் வீக்கமாகிவிட்டது. நான் சரியாக கவனிக்காததால் பாத்ரூமில் மயக்கம் போட்டு விழுந்தேன். எனது கை, கால் ஒரு பக்கம் செயலிழந்ததுடன், சுய நினைவும் இல்லாமல் போய்விட்டது. ஏழு நாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். எனினும் சிறிதுகூட சரியாகவில்லை. இந்நிலையில் அன்பரின் ஊழிய ஜெப மையத்தை தொடர்புகொண்டு எனது வீட்டார் ஜெபிக்கும்படி கேட்டார்கள். தேவனுடைய கிருபையால் கொஞ்சம் கொஞ்சம் சரீரம் முன்னேறி உள்ளது. இப்போது நான் எழுந்து நடக்கும் அளவிற்கு தேவன் கிருபை செய்துள்ளார். அற்புதம் செய்த தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரம்!

- Sis. பிரிஸில்லா, சேலம்

## பொல்லாத ஆவிகளிலிருந்து அற்புத விடுதலை!



மூன்று ஆண்டுகளாக சரீரப் பிரகாரமாகவும், மனதளவிலும் சமாதானமின்றி வாழ்ந்து வந்தேன். எனது வீட்டிலும் நிம்மதி என்பது இல்லாமல் மிகுந்த சோர்வுடன் கண்ணீரில் நாட்களை கடத்தினேன். இதற்கு என்ன காரணம் என்பதும் தெரியவில்லை. இந்நிலையில் எனது நண்பர் மூலமாக ஹனம்கொண்டா பகுதியில் நடை பெற்ற ஜெபக் கூட்டத்தை குறித்து கேள்விப்பட்டு அதில் நம்பிக்கையுடன் கலந்துகொண்டேன். அங்கு Dr.ஆனந்த ஸ்திரா அவர்களை பார்க்க திரளான மக்கள் காத்திருந்தார்கள். அநேக மக்கள் சகோதரர் ஜெபிக்கும் பொழுது விடுதலையாவதை கண்டு ஆச்சரியமடைந்தேன். என் முறை வரும்பொழுது சகோதரன் என்னை உடன் பிறந்த சகோதரனை போல நினைத்து, கனிவுடன் விசாரித்து எனக்காக ஒரு சிறு ஜெபம் தான் செய்தார்கள். அவரது கரங்கள் என் மீது பட்டவுடனே எனக்குள்ளிருந்த அலைக்கழிக்கும் ஆவிகள் வெளியேறியது. தேவ வல்லமையினால் நான் கீழே விழுந்தேன். ஒருசில நிமிடங்கள் கழித்து எழுந்திருந்த பொழுது என் மனதில் ஒரு தெய்வீக சமாதானம் ஆட்கொண்டதை

உணர்ந்தேன். சகோதரன் மீண்டும் எனக்காக ஜெபித்து **"கர்த்தர் உங்களை பரிபூரண விடுதலையாக்கிவிட்டார், சமாதானத்துடன் செல்லுங்கள்"** என்று கூறினார்கள். பூரண விடுதலை தந்த தேவனை துதிக்கின்றேன்.

- திரு. பிரகாஷ், ஆலூர்

## செய்வினை கட்டுகள் ஜெபத்தினால் அகன்றது!

எனது சகோதரி கடந்த ஐந்து மாதங்களாக உடல் வலியினாலும், எரிச்சலினாலும் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார் கள். மருத்துவ சிகிச்சைகளை மேற் கொண்டும் சுகம் கிடைக்கவில்லை. இதற்கு காரணம் எனது உறவினர்கள் சகோதரி மரித்துவிட வேண்டும் என்பதற்காக செய்வினை வைத்திருந்தார்கள். ஒவ்வொரு நாளும் சகோதரியை நினைத்து கண்ணீரில் நாட்கள் நகர்ந்தன. இந்நிலையில் **Dr.ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஜெபக் கூட்டம் எங்கள் பகுதியில் நடப்பதை அறிந்து நம்பிக்கையோடு சகோதரியை அழைத்து வந்தேன். தனி ஜெப வேளையில் சகோதரர் நாங்கள் எதுவும் சொல்லாமலேயே எனது சகோதரியின் விடுதலைக்காக, செய்வினை கட்டுகள் அகல ஜெபித்தார்கள். ஜெபிக்கும் பொழுதே செய்வினை கட்டுகள் அகன்றதை எங்களால் உணர முடிந்தது. அதன் பிறகு எனது சகோதரிக்கு இருந்த உடல் வலி, எரிச்சல் குணமானது. இப்பொழுது விடுதலையுடன், சந்தோஷமாக இருக்கின்றார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!



- திரு. ரமேஷ், நகோல்

## Employment Opportunity
## வேலை வாய்ப்புகள்

1) ***Accountant***
   ***B.Com., / M.Com., Graduates***
   *Skills Required : Tally ERP 9* பயன்படுத்த தெரிந்தவர்கள்
2) ***Prayer warriors :*** *Qualification +2/Any degree Born again Christian only*
3) ***Camera men with adequate experience***
   முன் அனுபவமுள்ள கேமராமேன்கள்
4) ***Video Editors***
5) ***Drivers***
6) ***Cooks***
7) ***House keepers***

தகுந்த ஊதியம் கொடுக்கப்படும்

*Apply to : info@mojindia.org*

கிறிஸ்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்



# S J SAVES TRUST

## நலிந்தோரின் நல்வாழ்வு அறக்கட்டளை

- ☆ உன் வாழ்நாள் முழுவதும் நீதியை கடைபிடி அநீதியின் வழியில் செல்லாதே
- ☆ உண்மையை கடைபிடிப்போர் தங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பர்
- ☆ தர்மம் செய்யும்பொழுது முகங்கோணாதே
- ☆ ஏழைகள், எளியவர்களிடமிருந்து உன் முகத்தை திருப்பிக்கொள்ளாதே
- ☆ அதனால் தேவாதி தேவனாகிய கர்த்தரும் தமது முகத்தைத உன்னிடமிருந்து ஒருபோதும் திருப்பிக் கொள்ளமாட்டார்.
- ☆ உன்னிடம் மிகுதியான செல்வம் இருக்கும்பொழுது மிகுதியாகக்கொடு
- ☆ சிறிது செல்வம் இருந்தாலும் அதனிலும் தான் தர்மம் செய், அதில் ஒருபோதும் தயங்காதே.
- ☆ இவ்விதமாய் நீ தர்மத்தில் நிலைத்தோங்கும் பொழுது ஐசுவரியமுள்ள தேவன் உனக்கு பெரும் செல்வத்தை சேர்ப்பார்.
- ☆ எளியவர்களுக்கு நீ செய்யும் உதவி தேவனுக்கு கொடுக்கும் சிறந்த காணிக்கையாகும். - தோபித்து 4:6-11
- ☆ தரித்திரருக்குக் கொடுப்பவன் தாழ்ச்சியடையான் - நீதிமொழிகள் 28:27

எனக்கன்பான தேவ ஜனமே!

1998-ம் ஆண்டு நமது **SJ Saves Trust** அறக்கட்டளை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப வருடங்களில் என்னுடைய தனிப்பட்ட வருமானத்திலும், தொடர்ந்து பங்காளர்களாகிய உங்கள் உதவியுடனும் பல ஏழைப் பிள்ளைகளுக்கும், வயதானவர்களுக்கும் உதவிகள் செய்திருக்கிறோம். நன்மை செய்வதில் சோர்ந்து போகாமலிருப் போமானால் ஏற்ற காலத்தில் அறுப்போம் என்று **கலாத்தியர் 6:9ல்** அப்போஸ்தலர் பவுல் கூறி இருக்கிறார். நாம் தொடர்ந்து நன்மையான காரியங் களில் ஈடுபடுவோம். இப்போதும் கர்த்தருடைய அளவற்ற கிருபையினால் நமது டியூஷன் சென்டரில் படித்துக்கொண்டிருக்கிற 200 சிறுவர், சிறுமியருக்கு பள்ளிக்கூடத்திற்கு தேவையான நோட்டுகள் மற்றும் உபகரணங்கள், நல்ல சாப்பாடு வகைகள், மருந்துகள் கொடுத்தோம். இன்னும் 550 பிள்ளைகள் உதவிகள் பெற காத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நாம் உதவும்படி ஜெபியுங்கள். விசேஷமாக இந்த குளிர் காலத்தில் அவர்களுக்கு தேவையான பாய், போர்வை, ட்யூசன் படிப்பதற்கு வேண்டிய நோட்டுகள், பேனா, பென்சில் மற்றும் அத்தியாவசிய தேவையான சோப், சீப்பு, எண்ணெய் போன்ற பொருட்கள் வாங்கிக் கொடுக்க வேண்டும். அதுவுமல்லாமல் கிறிஸ்துமஸை முன்னிட்டு இவர்களுக்கு நல்லதொரு ஆடை எடுத்துக் கொடுக்க வேண்டும்.

**ஒரு பிள்ளைக்கு ரூ.750/-ஆகிறது.**

**1100 பிள்ளைகளுக்கு மொத்தம் Rs.8,25.000/- (ரூபாய் எட்டு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம்) தேவை**

மூத்த அப்போஸ்தலர்கள் பவுலையும், பர்னபாவையும் நோக்கி தரித்திரரை மாத்திரம் நினைத்துக்கொள்ளுங்கள் எனக் கூறினர். தரித்திரருக்கு உதவி செய்ய பவுலும், பர்னபாவும் ஏற்கனவே தீர்மானித்து இருந்ததாக **கலாத்தியர் 2:10ல்** பார்க்கிறோம். எனவே, கர்த்தர் உங்களை பலவிதங்களில் ஆசீர்வதித்து உங்களுக்கு தேவையான எல்லாவற்றையும் கொடுக்கும் பொழுது இப்படிப் பட்ட ஏழைகளையும் நினைத்துக் கொள்ளுங்கள்.

**கடந்த மாதத்தில் கர்த்தருடைய பெரிதான கிருபையால் கை, கால் செயல்படாத ட்யூசனுக்கு வராத மக்கள், காது கேளாத, வாய் பேசாத, கண்பார்வையற்ற ஊனமுற்ற 70 பிள்ளைகளுக்கும் மற்றும் 200 ஏழைப் பிள்ளைகளுக்கும் உதவிகள்**

வழங்க கர்த்தர் கிருபை செய்தார். அதற்காக தேவனை துதிக்கின்றோம். தொடர்ந்து SJ Saves Trust அநேகருக்கு நம்பிக்கையூட்டும் அறக் கட்டளையாக திகழ ஊக்கமாய் ஜெபியுங்கள். வேதம் தெளிவாக சொல்கிறது,

அவனுக்குத் தாராளமாய்க் கொடுப்பாயாக; அவனுக்குக் கொடுக்கும்போது உன் இருதயம் விசனப்படாதிருப்பதாக; அதினிமித்தமாக உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியை களிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங் களிலும் உன்னை ஆசீர்வதிப்பார்.

தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்ப தில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப் பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் - உபாகமம் 15: 10, 11

**தயாள குணமுள்ள உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!**

## SJ Saves Trust மூலம் ஆதரிக்கப்படும் ஆதரவற்ற, ஏழை பிள்ளைகளுக்கு உதவிய பங்காளர் குடும்பத்தில் கர்த்தர் செய்த மாபெரும் அற்புதம்!

## ஆட்டிசத்தினால் பாதிக்கப்பட்ட எனது பேரனை அற்புத சுகத்திற்கு நேராய் நடத்திய இயேசு!



எனது மகன் நோவா குடும்பமாக அமெரிக்க நாட்டில் வசித்து வருகின்றார். மகனுக்கு ஜோயல் என்னும் ஆண் குழந்தை இருக்கிறான். ஜோயல் ஆட்டிசம் என்னும் நோயினால் பாதிக்கப்பட்டபடியால் அதிகமாக சத்தமிடுவான். அவனது செயல்பாடுகள் அனைத்தும் மிக வேகமாக, எங்களால் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு இருக்கும். இது குறித்து மகன் அடிக்கடி எங்களிடம் தொலைப்பேசியில் சொல்வதுண்டு. இதைக் கேட்டு நாங்களும் குழந்தையை நினைத்து கவலைப்படுவோம். இந்த நிலையில் விஜயவாடாவில் **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் கூட்டம் நடைபெறுவதை அறிந்து அக்கூட்டத்தில் கலந்துகொண்டு தனி ஜெப வேளையில் **எனது பேரனின் நிலையை கூறி அவனது போட்டோவை காண்பித்தேன். சகோதரர் அன்புடன் எங்களை விசாரித்து பேரனின் சுகத்திற்காக ஜெபித்தார்கள்.** ஒருசில மாதங்களில் மகன் எங்களிடம் பேசிய பொழுது பேரன் **இப்பொழுது நன்றாக இருக்கிறான், சத்தமிடுவதில்லை, அமைதியாக நாங்கள் சொல்வதற்கு கீழ்ப்படிகின்றான் என்று கூறினான். அதைக் கேட்டு நாங்கள் மிகுந்த சந்தோஷமடைந்தோம்.** சகோதரரிடம் ஜெபித்த அந்த நாளில் கர்த்தர் அற்புதம் செய்தார் என்பதை அறிந்து சர்வவல்ல தேவனை துதித்தோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

எங்கள் பொருத்தனையாக, **S J Saves Trust** அறக்கட்டளை மூலமாக ஆதரிக்கப்படும் ஏழை குழந்தைகள் 100 பேருக்கு எங்களது பொருத்தனை காணிக்கையை தருவது எங்களுக்கு மிகுந்த மனநிறைவை தருகின்றது.

**- Rev. விஜயகுமார், குண்டூர்**


**ஏழை எளியவர்களுக்கு உதவிட கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 019150310875369 |
| Bank Name | : | Tamil Nadu Mercantile Bank |
| Branch | : | Palakarai, Trichy. |
| IFS Code | : | TMBL0000019 |
| A/c Type | : | Current |

**மருத்துவமனை பணிகளுக்கு கீழ்க்காணும் வங்கியின் மூலமாக அனுப்பவும்.**

| | | |
|---|---|---|
| Bank A/c Name | : | SJ Saves Trust |
| Account No. | : | 36477148891 |
| Bank Name | : | State Bank of India |
| Branch | : | Cantonment, Trichy Main Branch |
| IFS Code | : | SBIN 0000930 |
| A/c Type | : | Current |

**IT Act–ன்படி Sec. 80G Exemption உண்டு**

# சேலம் மாவட்டம் கருமாபுரம், எம்.ஜி.ஆர் நகர், பத்தாங்கல்மேடு ஆகிய பகுதிகளில் செய்யப்பட்ட நற்பணிகளின் தொகுப்பு





மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி வழங்குதல்










# S J SAVES TRUST

## கிராமப்புற மருத்துவமனை பணிகள்

**உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்.**
**கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை; உன் ஆயுசுநாட்களைப் பூரணப்படுத்துவேன் - யாத். 23:25,26**

எனக்கருமையான தேவ பிள்ளைகளே!

கர்த்தர் இயேசு உலகத்தில் இருந்தப்பொழுது தேவன் அவரை பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிரப்பினார். இதனிமித்தமாக அவர் சென்ற இடமெல்லாம் நூற்றுக்கணக்கான பிணியாளிகள் சுகமடைந்தனர். பேய்கள் ஓடின, ஜனங்கள் தங்கள் பெலவீனங்களிலிருந்து விடுதலை பெற்றனர்.

**பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார்.**

**அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதி களையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்களைச் சொஸ்தமாக்கினார் - மத்தேயு 4 : 23, 24**

இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியங்கள் மத்தியிலும் அற்புதம் செய்யும் ஊழியத்தையும், விடுதலையின் ஊழியத்தையும் ஒருபோதும் அவர் கைவிட்டதில்லை. அவரை கெத்செமேனே தோட்டத்தில் கயவர்கள் பிடித்த பொழுதும்கூட, தமக்கு ஆதரவாயிருந்த சீஷன், பிரதான ஆசாரியனாகிய காய்பாவினுடைய வேலைக்காரனின் காதுகளை வெட்டினான். அந்த வேலைக்காரன் காதுகள் வெட்டுப்பட்டு கீழே விழுந்த போதும், இயேசு அந்த வேலைக்காரனின் காதைத் தொட்டு சொஸ்த மாக்கினார். இதன்மூலம் இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் அவர் நமக்காக கொடிய சிலுவை மரணத்தை அடையும் வரைக்கும் சுகமளிக்கும் ஊழியத்தை செய்தார் என்பதை அறிகின்றோம். **"பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே யல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டிய தில்லை"** என்று திட்டமும் தெளிவுமாக கூறினார். **(மாற்கு 2:17)** எனவே நாமும் கர்த்தருக்காய் ஜீவிக்கும் பொழுது பிணியாளிகளை அதிகமாய் நினைப்போம். அவர்களுக்கு நம்மால் இயன்ற உதவியை செய்வோம். அப்பொழுது கர்த்தர் நம் சிறையிருப்பை நீக்கி ஆசீர்வதிப்பார். இதன் காரணமாக எழுப்பப்பட்டது தான் S J Saves Trust Rural Hospital அறப்பணி. எனவே, இந்த மருத்துவமனை நல்லமுறையில் இயங்க, அநேக மக்கள் நன்மையடைய ஊக்கமாய் ஜெபியுங்கள். இதற்கு நீங்கள் மனமுவந்து உதவும் பொழுது கர்த்தர் தாமே உங்கள் நோய்களையும் உங்களைவிட்டு நீக்கி குணப்படுத்துவாராக. கஷ்டப்படுகிற, வேதனைப் படுகிற ஒவ்வொரு நோயாளிகள் முகத்திலும், கைவிடப்பட்ட ஒவ்வொரு சிறு குழந்தைகள், பெரியவர்கள் முகத்திலும் இயேசுவை காண்கிறேன் என்று அன்னை தெரஸா கூறினார்கள். அதே போல நாமும் துயரப்படுகிற மக்களுக்காக உதவிகள் செய்வதன் மூலம் சேவை செய்வோம். கர்த்தர் தாமே மருத்துவமனை பணி களுக்கு உதவி செய்கிற உங்களை ஆசீர்வதிப்பாராக!

**Telugu Whats App No: 91770 87860**

# கிராமப்புற மருத்துவமனை பணிகளை தொடர்ந்து தாங்கின பங்காளர் வாழ்வில் கர்த்தர் செய்த அற்புதம்!

நாங்கள் பல ஆண்டு காலமாக அன்பரின் ஊழியத்தின் பங்காளராக இருக்கின்றோம். **Dr. ஆனந்த ஸ்திரா** அவர்கள் ஜெபத்தினால் தேவனிடமிருந்து ஏராளமான அற்புதங்களை பெற்றுள்ளோம். சகோதரர் தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி ஆரம்பித்த கிராமப்புற சேவை மருத்துவமனை ஆரம்பித்த நாளிலிருந்து தொடர்ந்து ஏழை நோயாளிகள் பயன்பெறும்படியாக எங்களால் இயன்ற பொழுதெல்லாம் உதவி வருகின்றோம். இதனிமித்தம் கர்த்தர் எனது மகன் வாழ்வில் மாபெரும் அற்புதம் செய்துள்ளார். மகன் **Merit**-ல் இடம் கிடைத்து **M.B.B.S.** படித்து முடித்தான். தொடர்ந்து மேற்படிப்பான **M.S.Ortho** படிப்பதற்கு கடுமையான போட்டியின் மத்தியிலும் இடம் கிடைக்க இரக்கமுள்ள தேவன் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! தொடர்ந்து மருத்துவமனை பணிகளை தாங்கி வருகின்றோம்.

**- Dr. வேதமணி ரீட்டா, கோயம்புத்தூர்**



HIRING NOW

## WANTED FOR SJ RURAL HOSPITAL

- Doctors - M.B.B.S. with 5 Years experience (Rtd. Doctors can apply)
- ANM Nurses (3 1/2 Year course completed & 5 Years experience)
- Hospital Supervisor
- Gardener - Single or Family

Apply to : info@mojindia.org | *Service Minded, Mission Oriented, Christians Preferred*

## எமது You Tube சேனல்களை Subscribe செய்யவும்



Ministry of Jesus - Dr. Ananda Stira



Dr Jane Joshua



My Deliverance Church

## எமது முகநூல் பக்கங்கள் (Face book)

Ministry of Jesus (Anbarin Oozhiyam) @ministryofjesus.in

Ananda Stira @dranandastira

Margretstira

Jane Joshua @DrJaneJoshua

My Deliverance Church @mydeliverance.church

Rev.Dr.A. Joshua @RevDrAJoshua

Ministry of Jesus
dr. janejosh
jonathanmosesstira

ministryofjesus.in

drjane15

# உலகச் செய்திகள்



மத்திய கிழக்கு நாடுகளிலேயே மிகப்பெரிய நீர்வாழ் உயிரின காட்சி சாலை அபுதாபியில் திறக்கப்பட்டுள்ளது. ஏராளமான சுறா மீன்கள், நீர்வாழ் உயிரினங்கள் இந்த காட்சி சாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. வனவிலங்கு காட்சி சாலைகளும், நீர்வாழ் உயிரின பூங்காக்களும் குழந்தைகளுக்கு மட்டுமின்றி பெரியவர்களுக்கும் அலாதியான மகிழ்ச்சியை கொடுக்கக்கூடியவை. அந்த வகையில் மத்திய கிழக்கு நாடுகளிலேயே மிகப்பெரிய நீர்வாழ் உயிரின காட்சி சாலை அபுதாபியில் திறக்கப்பட்டுள்ளது. 9000 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்த காட்சி சாலையில் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அறிய வகை நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் பறவைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஏறத்தாழ கடலுக்கு நடுவே செல்வது போன்ற உணர்வை கொடுப்பதாக கூறும் பார்வையாளர்கள், வண்ணமயமான குட்டி, குட்டி மீன்கள் கண்களுக்கு விருந்து அளிப்பதாகவும் தெரிவித்துள்ளனர். குட்டீஸ்களை கவர விமானம், கார் போன்ற வடிவங்களில் தொட்டி அமைத்து அதில் மீன்களை விட்டுள்ளனர். உலகின் மிக நீளமான ஊர்வனமாக கருதப்படும் புகழ்பெற்ற சூப்பர் ஸ்நேக், ஹேமர் ஹெட் சுறாக்கள், ஆசிய வாட்டர் மானிடர் பல்லி உள்ளிட்ட வித்தியாசமான உயிரினங்களும் இங்கு உள்ளன.

காட்சி சாலைகளை பராமரிக்கவும், உயிரினத்தின் உடல்நலத்தை உறுதிப்படுத்தவும் 80 நீர்வாழ் உயிரின நிபுணர்கள் கொண்டு குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தனித்தனியாக 10 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ள இந்த நீர்வாழ் உயிரின காட்சி சாலையை முழுமையாக சுற்றிப்பார்க்க சுமார் 2 மணி நேரமாகுமாம். கொரோனா காரணமாக காட்சி சாலையை திறப்பதற்கு நீண்ட காலம் ஆனாலும் தற்போது பார்வையாளர்கள் கூட்டம் நாளுக்குநாள் அதிகரிப்பது மகிழ்ச்சி அளிப்பதாக பூங்கா ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.



சாதனை புரிவதற்கு வயது ஒரு அளவு கோல் கிடையாது என்பதை தினசரி நாம் பார்த்து வருகிறோம். சிறு குழந்தைகள் முதல் முதியவர் வரை ஏதாவதொரு வகையில் அவ்வப்போது சாதித்து கொண்டேதான் இருக்கின்றனர். அப்படி பெங்களூருவை சேர்ந்த 6 வயது சிறுவன், உலக சாதனையாளர்கள் புத்தகத்தில் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். அவரை பற்றிய சுவாசிய மிக்க செய்தி தொகுப்பை இங்கே பார்ப்போம்.

பெங்களூரு ஆர்.டீ.நகரில் வசித்து வருபவர் ஸ்ரீவிஜய். இவர் மலேசியாவில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி வசந்தி, கம்ப்யூட்டா என்ஜீனியராக பணியாற்றி வந்துள்ளார். இந்த தம்பதியருக்கு 6 வயதில் தருண் என்ற மகன் உள்ளான். அதனால், மனைவி வசந்தி தனது வேலையை விட்டுவிட்டு வீட்டிலிருந்தபடியே தன் மகனை பொறுப்பாக கவனித்து வந்துள்ளார். அதேசமயம் அவரிடம் இருந்த திறமைகளை கண்டு பிடித்த தாயார் வசந்தி, அவரை சரியான பாதையில் முன்னேற்றி சென்றுள்ளார். தருண் 14 மாத குழந்தையாக இருந்தபோது மலேசியாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவருக்கு **"ஆசிய ஸ்மார்ட் குழந்தை"** என்ற விருது கிடைத்தது. மேலும், அதிக நினைவாற்றல் கொண்ட குழந்தை என்ற விருதும் கிடைத்தது. அடுத்தாக சுயமாக கற்றலில் திறன் படைத்த தருண், அதற்காக இந்திய புக் ஆப் ரெக்கார்டு புத்தகத்திலும் இடம் பிடித்தார்.

## அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
## (Renovation)
## புதுப்பித்தல் பணிகள்

உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி அன்பரின் ஊழிய ஜெப ஸ்தலம் கட்டி முடிக்கப்பட்டு 8 வருடங்கள் ஆகிறது. இதுவரைக்கும் நாம் எந்த பராமரிப்பு பணிகளும் அதில் செய்யவில்லை. குறிப்பாக ஆரம்பத்திலிருந்தே நாம் சில வேலைகளை நிலுவையில் வைத்துள்ளோம். அவை அனைத்தும் கண்டிப்பாக இந்த வருடத்தில் நாம் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனெனில் ஜெப ஸ்தலத்தில் அநேக இடங்களில் பழுது ஏற்படுகின்றது. நாட்கள் செல்ல செல்ல அது அதிகரித்து விடலாம். எனவே இந்த பராமரிப்பு பணிகளுக்கு உங்கள் உதாரத்துவமான நன்கொடைகளை, உதவிகளை அனுப்பிடுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தேவனுடைய ஜெப ஸ்தலத்தை நீங்கள் பராமரிக்கும் பொழுது கர்த்தர் உங்களுடைய குடும்பத்தையும் ஆசீர்வதித்து பெருகச் செய்வார்.

( Rs.20,000/- கொடுக்கக் கூடிய 100 நபர்கள்)

**தேவைப்படுகின்ற தொகை – Rs.20,00,000/-**

இப்பொழுது நமது வெப்சைட்டிலும் உங்கள் உதாரத்துவமான காணிக்கைகளை அனுப்பலாம்.

**ministryofjesus.in-donate**

## கிறிஸ்துமஸ் பண்டிகை ஆராதனை

**நாள்: டிசம்பர் 25 (சனிக்கிழமை)**

**நேரம்**
**அதிகாலை**
**6 மணி**

**இடம்: டெலிவரன்ஸ் சர்ச்,**
**அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்**
**10வது குறுக்குத்தெரு, மேற்கு விஸ்தரிப்பு**
**தில்லைநகர், திருச்சி – 18**



**கிறிஸ்துமஸ் செய்தி:**

## Dr. ஆனந்த ஸ்திரா

குறிப்பு: இப்பண்டிகை ஆராதனையில் பரிசுத்த திருவிருந்து ஆசரிக்கப்படும்.

திருச்சியில்

# ஆண்டிறுதி ஸ்தோத்திர ஜெபம்

நாள் : 2021
டிசம்பர் 18
சனிக்கிழமை

நேரம் :
மாலை 3.00 மணி முதல்
6.30 மணி வரை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18

தேவ செய்தி

**Dr. ஆனந்தஸ்திரா & குடும்பத்தினர்**

தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627

அரசாங்க வழிகாட்டுதல் நெறிமுறைகளை தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்

---

திருச்சியில்

# புத்தாண்டு வாக்குத்தத்த தீர்க்கதரிசன ஆசீர்வாத ஜெபம்

நாள் : 2022
ஜனவரி 1
சனிக்கிழமை

நேரம் :
மாலை 3.00 மணி முதல்
6.30 மணி வரை

இடம் : அன்பரின் ஊழிய ஜெபஸ்தலம்
10வது குறுக்குத்தெரு மேற்கு விஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி – 18

புதுவருட வாக்குத்தத்த தீர்க்கதரிசன செய்தி

**Dr. ஆனந்தஸ்திரா**

புத்தாண்டு தீர்க்கதரிசன ஆசீர்வாதத்தை பெற்று மகிழ உங்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!

தொடர்புக்கு : (0431) 2765386, 94888 45627

---

**Tamil Whats App No: 95004 87059**

dranandastira@mojindia.org, margret@mojindia.org,
joshua@mojindia.org, jane@mojindia.org,
info@mojindia.org